தமிழ் முரசு

ஆசிரியர்:
ம.பொ.சிவஞானம்

பொங்கல் பரிசு
ஆடுவோமே
இருவர் நாமே
AVM புரொடக்ஷன்ஸ்
நாம் இருவர்
டைரக்ஷன்
AV. மெய்யப்பன்
அசோஸியேட் டைரக்ஷன்
M.V. ராமன் & ப. நீலகண்டன்
கதை வசனம்
ப. நீலகண்டன்
காரைக்குடி ஏவி . எம் . ஸ்டுடியோவில் தயாரானது

தமிழ் முரசு

தொகுதி : க | விய - தை - உ 15-1-1947 | பகுதி : உ

பொருளடக்கம்

பொங்குக பொங்கல்! (பாட்டு)	க. தங்கவேலன்	... உ
ஆத்திரப் பொங்கல்	தலையங்கம்	... ங
செய்திகள்		.... ம
தமிழர் திட்டம் (பாட்டு)	பு. ரா. சுப்பிரமணியன்	...கஉ
ஆலயப் பிரவேசம்	ம. பொ. சி.	...கச
'அவனை அவர் பாடியது'	மீ. ரா. போ. குருசாமி	....கஎ
நாட்டு நடப்பு	'ஒற்றன்'	...ககூ
தமிழ் அரசு	நாமக்கல் கவிஞர்	...உச
அன்னைக்கு – ங	மு. வரதராசன்	....ங0
தமிழன் - அன்றும் இன்றும்	அ. ச. ஞானசம்பந்தம்	...ஙஎ
கோட்டு முரசு	'சிசு'	...ச0
வைகுந்தம் திறந்தது	'பாமரன்'	...சஉ
மதிப்புரை		...சஅ

கதைகளில் வருவன கற்பனைப் பெயர்களே.

விலை 4 அணா

பொங்குக பொங்கல்!

க. தங்கவேலன்

செந்தமிழ் வாழ்கென்று சிந்தை குளிர்ந்திட
வந்தனை செய்திட்டுப் பொங்குக பொங்கல்!
வாழிய பாரதம் பொங்குக பொங்கல்!

இன்ப சுதந்திரம் எங்கும் விளங்கிட
அன்பு வளர்கென்று பொங்குக பொங்கல்!
ஆற்றல் சிறந்திடப் பொங்குக பொங்கல்!

பாடு கொடுத்தவற் கீடு கொடுத்திட
நாடு செழித்திடப் பொங்குக பொங்கல்!
நற்கலை ஓங்கிடப் பொங்குக பொங்கல்!

மாடுகள் ஆடுகள் மக்கள் சிறந்திட
வீடுகள் பொங்கிடப் பொங்குக பொங்கல்!
வேற்றுமை வீழ்ந்திடப் பொங்குக பொங்கல்!

துய்ய சுதந்திரத் தூநெறி ஆட்சியில்
வையகம் ஒன்றெனப் பொங்குக பொங்கல்!
வாழ்வு சிறந்திடப் பொங்குக பொங்கல்!

தமிழ் முரசு

"வெற்றி எட்டுத்திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டு முரசே!

ஆத்திரப் பொங்கல்

பொங்கல் திருநாள் உழவர் மக்களுக்கே சிறப்பாக உரியது. என்றாலும் இன்றைய நாளில் அப் பெருநாள் தமிழர் அனைவர்க்கும் உரிய திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. உழவுத் தொழில் மனிதனின் உயிரோடு கலந்த ஒன்று. மனிதன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருளைத் தருவது உழவுத் தொழிலே அல்லவா ?

நீர், நிலம், வான் ஆகிய இயற்கைச் சக்திகளின் துணை கொண்டே உழவன் தனது தொழிலைத் திறம்பட நடத்துகிறான். இயற்கை நெறி பிறழுமேல் உழவுத் தொழில் மக்களுக்கு உணவைத் தருவது இயலாதென்பது வெளிப்படை. எனவே, உழவன் தனது தொழிலுக்கு உறுதுணையாக உள்ள இயற்கைச் சக்திகளுக்குத் தலை வணங்கி நன்றி செலுத்தும் நாளே பொங்கல் நன்னாள்.

உழவுத் தொழில் உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஒன்று. அப்படியிருந்தும் அத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு திருவிழாக் கொண்டாடுவது, அதுவும் உழவுத் தொழில் செய்யும் தமிழர் மட்டுமல்லாமல் ஏனைய எல்லாத் தமிழரும் இணைந்து நின்று தங்கள் இனத்தின் பண்பாட்டுத் திருநாளாகக் கொண்டாடுவது ஏன்? காரணம், கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே 'முன் தோன்றி, மூத்த குடி தமிழ்க் குடியே என்பதாகும். எனவே, தமிழர் பெருமையுடன் இத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

பொங்கல் திருநாள் கொண்டாடுவதன் காரணத்தை அறிந்தோம். ஆனால் அது தோன்றிய காலத்தை அறிய இயல வில்லை. அழிந்துபட்ட தமிழ்இலக்கியங்கள் அகப்பட்டால் ஒரு வேளை அறியலாம் போலும். அந்த அற்புதத்தைச் செய்வார் யார்?

பொங்கல் திருவிழாவோடு உறைந்து நிற்கும் தமிழர் பண்பாட்டைச் சிறிது ஆராய்வோம். பொங்கற் பெருநாள் தோன்றிய காலத்தில் உழவனுக்கு அவன் உழைக்கும் நிலத் தில் உரிமை இருந்தது. அவன் எந்த ஆண்டைக்கும் அடிமை இல்லை. உலகம் அவனை அண்டிப் பிழைத்தது. மண் ணுடையான் [வேள் ஆளன்] என்ற மாண்புமிக்க பெயர் அவனுக்கே உரியதா யிருந்தது. பண்டைக்கால உழவன் தனக்காகவும் உலகத்துக்காகவும் உழைத்தான். தனது உழைப்பில் தேவைக்கு எடுத்ததுபோக எஞ்சியதைச் சேமித்து வைக்கும் 'திருட்டுத்தனம்' அவனிடம் இருந்த தில்லை. பாடுபட்டுக் கண்ட பலனைப் பகுத்து ஈந்து பல்லுயிர் ஓம்பினான்.

உழவன் உள்ளத்தின் வள்ளன்மையைப் பார்த்தோம். அவன் உழுத நிலத்தின் வண்மையையும் பார்ப்போம். இயற்கை நெறிபிறழாது உதவ, உழவன் ஓய்வின்றி உள்ளக் களிப்புடன் உழைக்க, நிலம் பொன் கொழிக்கும் வள முடையதா யிருந்தது. "சோழ வளநாடு சோறுடைத்து" என்ற சிறப்புப் பெயர் பெற்றது சோழநாட்டு மண். இக்காலத்தில் மனிதருக்குப் பட்டம் தரும் பழக்கத்தைப் பார்க்கிறோம். ஆனால், தனி மனிதனைப் போற்றுவதை விரும்பாத, பெரி யோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் பேதைமைப் புத்தி என்று உணர்ந்த பண்டைத் தமிழர்,மண்ணுக்குப் பட்டம்

தந்த மாண்பினை என்னென்று சொல்வோம்! வளமார்ந்த வயல்களுக்குப் பொன் வயல் என்ற பட்டம் தந்த பண்பாடு தமிழருக்கே உரியது. இந்த வளம் வாய்ந்த நிலத்தைச் சேர்ந்திருந்த காரணத்தால் விளையாத நிலம் கூடப் பொன் விளைந்த களத்தூர் எனச் சிறப்புப் பெற்றது. அதிகம் சொல் வானேன்? நிலத்தைத் தாயெனவே தலை வணங்கினான் தமிழன். இது பண்டை நாளில் பொங்கல் விழாக் கொண்டாடிய காலத்தின் நிலை.

இன்றும் பொங்கல் விழா உறுகின்றது. என்ன பொங்குகிறது? பால் என்பீர்கள். ஆனால் பாலுக்கு அழும் பச்சிளங் குழந்தைகளின் கோரக் குரல்கள் கேட்பதை எங் ஙனம் மறப்பது? 'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்' பெருகி, 'நீங்காத செல்வம் நிறைந்து' இருந்த திருநாடாம் நம் தமிழ் நாட்டில் அந்தப் பொங்கலை நினைத்து விட்டுப் பால் பஞ்சம் நேர்ந்துள்ள இன்றைய பொங்கலை நினைத்தால் ஆத்திரம்தான் பொங்குகிறது.

இன்றும் உழவன் இருக்கிறான்; பயிர் செய்ய நிலம் இருக்கிறது; பாடுபட மனமும் இருக்கிறது. ஆனால் அந்தப்பாவி மகனுக்குத் தான் பட்ட பாட்டின் பலனை அனுபவிக்கும் பாக்கியம் இல்லையே! அதுமட்டுமா? அவன் அடிமை. வெறும் அடிமை மட்டுமல்ல, அடிமைக்கு அடிமை. அதுதான் விநோதம். ஆளுவோருக்கு அடிமை ஜமீன்தார்; ஜமீன்தா ருக்கு அடிமை ஏழை விவசாயி.

பண்டை நாள் பொங்கல் விழாவில் பாடுபடும் உழ வனுக்கு மாடு, கன்று உண்டு. தான் களிக்கும் பொங்கல்விழா வில் தன்னோடு உழைக்கும் மாட்டுக்கும் மகிழ்ச்சி அளித்தான்.

இயற்கைச் சக்தியாகிய கதிரவனுக்கு முன்னாள் போங்கல்; செயற்கைச் சக்தியாகிய மாட்டுக்கு மறுநாள் பொங்கல். தன்னை அலங்கரிக்கத் தவறினாலும் மாட்டை அலங்கரித்து மனம் மகிழ்ந்தான். இன்று மண்ணில் உரிமை இல்லாதது போலவே மாட்டின்மீதும் அவனுக்கு உரிமை இல்லை. ஆட்கோண்ட எஜமானனுக்கு, தான் அடிமைப்பட்டு உழைப்பதோடு அந்த மாட்டையும் உழைக்கச் செய்வதைத் தவிர, அதை உள்ளம் களிக்கச் செய்ய உரிமை இல்லை.

நிலத்தின் வளத்தைப் பற்றி நினைந்து விட்டால் நம் நெஞ்சம் கோதிக்கின்றது. போன் விளைந்த பூமி என்ற பெயர் புலவனின் கைச்சரக்கு என்றாயிற்று. முப்போகம் விளைந்து, மூன்று வேளையும் மக்கள் வயிறார உண்ட அந்த நிலவளம் இன்று நில்லாது போயிற்று. பிரேசில் அரிசிக்குப் பிச்சையெடுக்கும் கோரம் பேசுந் தரமல்ல. காரணம் என்ன? தமிழன் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வதை மறந்தான். அவனுக்கு அரசில்லை; அதிகாரம் இல்லை. எனவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பயிர் செய்யப் பயன்பட்ட கருவி இந்தப் பகுத்தறிவுக் காலத்திலும மாறிய பாடில்லை.

அந்தோ! அரசிழந்த தமிழன் அறிவையும் இழந்து விட்டான். உரிமையுடன் உலகாண்ட தமிழன் 'ஊரும் சதமல்ல' என்று ஒப்பாரி வைக்கத் துவங்கி விட்டான். தன் செயல் கோண்டு தரணியை ஆண்ட தமிழன் 'என் செயலாவது யாதொன்று மில்லை' என்று ஏங்கத் துவங்கிவிட்டான். இல்லறம் ஒன்றே இணையற்ற அறம், வருவிருந்து ஓம்புவதே வாழ்வானின் கடன், பணி செய்து கிடப்பதே படித்ததன்

பயன், தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சியால் முடித்தல் இயலும் என்ற பண்பாடெல்லாம் பாழுக்கு இறைத்துப் பரதேசிகள் சொன்ன பகுத்தறிவற்ற வாதங்களுக்கு அடிமையானான், உரிமை இழந்தான், உடைமை இழந்தான், உள்ளம் இழந்தான். 'மண்ணுந் தழலாற வானும் புகையாற, எண்ணரிய தாயும் இளைப்பாற—பண்ணுமயன்—கையாறப் பாவியேன் காலாறவும் கண்பார், ஐயா திருவையாறு . . .' என்று அலறி யழுகின்றான். இந்தப் பாவிக்கு வேறு எங்கே தான் இடம் கிடைக்கும்?

இன்றைய பொங்கல் திருநாளில் தமிழனின் சீரழிந்த நிலையை மேலே செப்பினோம். இந்த நிலையில் தமிழன் கொண்டாடுவது ஆனந்தப் பொங்கல் அல்ல. ஆத்திரப் பொங்கல். நாம் மேலே சொன்ன தமிழினத்தின் அவல நிலை, அறிவற்ற நிலை, ஆண்மை யழிந்த நிலை நேற்றோடு தீர்ந்தது.

இன்று பொங்கல் நன்னாள். தமிழா! உன் வீட்டில் உலை பொங்காமல் இருக்கலாம், அதற்காகக் கவலைப்படாதே. உன் உள்ளமாவது பொங்கட்டும்!

உன் அறிவை அழித்து அறியாமையைத் தந்த எழுத்தின் தலையெழுத்து இன்றோடு தீர்ந்தது. இன்று—பொங்கல் திருநாளில்—புது எழுத்து பிறந்துவிட்டது. அதுதான் உன்னை வாழ்விக்க வகை காணும் வாய்மையுள்ள எழுத்து!

இன்றைய பொங்கல் நன்னாளில் உன் வீட்டு அடுப்பில் தீ மூளவில்லையே என்று தேம்பி அழாதே. உன் உழைப்பைப் பறித்து உள்ளத்தில் தீ மூட்டிய அந்த முதலாளித்துவக்

கோட்டையிலே இன்றைய பொங்கல் நன்னாளிலே 'மூண்டது தீ' என்று மூன்றுலகும் கேட்க முழக்கமிடு!

'அரசிழந்தோம், அடிமை யானோம்' என்று இன்றைய பொங்கல் நன்னாளிலே புலம்பி அழாதே. ஆதிக்க வாதிகளின் அரியாசனம் ஆட்டம் கண்டுவிட்ட தென்று உன் உள்ளத்தே ஆனந்தம் பொங்கட்டும் தமிழா! "அடைந்து விட்டோம் அரசுரிமை; அஞ்சமாட்டோம்" என்று ஆரவாரம் செய்!

விவசாயி மக்களே! உங்கள் நிலத்தில் புகுந்த முதலைக் கூட்டங்களின் கடைசி மூச்சுக்குக் காலம் வந்துவிட்டது. உழவர் மக்கள் உள்ளம் பொங்கினால் இந்த உலகம் பொங்கும் என்ற உண்மையை ஓங்கி முழங்குங்கள்! "படை திரண்டோம். பாடுபடும் நிலத்தைப் பறிகொடுக்க மாட்டோம்" என்று இன்றைய பொங்கல் நன்னாளிலே பாரறியக் கூவுங்கள்!

தமிழா! பொங்குது பொங்கல்! உலை பொங்கா வீட்டில் உள்ளம் பொங்குது! தமிழனுக்கு இந்த ஆண்டு ஆத்திரப் பொங்கல்! அடுத்த ஆண்டு ஆனந்தப் பொங்கல்!

வாழ்க தமிழகம்!

வாழ்க தமிழினம்!!

பொங்குக பொங்கல்!!!

சுதந்திர விழா

இம்மாதம் 26-ம் தேதி இந்தியாவின் சுதந்திரத் திரு நாள் வருகின்றது. அந்நாளை இந்தியாவின் இதர பகுதியி

ளுள்ள இனத்தவரைப்போலத் தமிழினத்தவரும் சிறப் பாகக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வழக்கம் போலச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று காங்கிரஸ் மகா சபை கட்டளை பிறப்பித்திருக்கிறது. இந்தியா வின் சுதந்திரக் கோரிக்கை நாற்பதுகோடி மக்களுக்கும் பொதுவானதாகும். அதேபோலப் பிரிட்டிஷ் ஏகாதிபத் தியமோ அல்லது அதைப் போன்ற எந்த ஏகாதிபத்தி யமோ இந்தியரின் பொது விரோதிதான்.

இந்தச் சுதந்திரத்தை அடைய ஏனைய இந்திய இனத் தவரோடு ஓரே சமுதாய உணர்ச்சியோடு இவ்வளவு கால மும் தோளோடு தோள் நின்று தமிழர் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு எல்லாவிதத் தியாகத்தை யும் செய்துள்ளனர். நமது சுதந்திரப்போர் இன்னும் முடிந்துவிட வில்லை. எனவே, இந்தச் சமுதாய உணர்ச்சி யுடன் சுதந்திரத் திருநாளைக் கொண்டாடுவோம். ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தியாவின் சுதந் திரம் என்பது அதில் வாழும் ஒவ்வொரு தேசிய இனத்தவ ரின் சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தி யக் குடியரசு என்றால் பல்வேறு தேசிய இனங்களின் குடி யரசுகள் இஷ்டப்பட்டு ஏற்படுத்திக் கொள்ளும் இந்திய ஐக்கியக் குடியரசு என்றே பொருள். இந்த எண்ணம் தமிழ் மக்களிடையே பரவச் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே, ஜனவரி 26-ம் தேதியன்று தமிழர் கள் இந்தியாவின் சுதந்திரப் பிரதிக்கினையை மேற்கொள் ளுவதோடு அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்ற எல்லா விதத் தியாகங்களையும் செய்ய முற்படுவாராக.

செய்திகள்

'தமிழ்முரசு' துவக்க விழா :

தமிழ் முரசின் முதல் வெளியீட்டு விழா லிங்க செட்டி தெருவிலுள்ள திருமணச் சத்திரத்தில் கொண்டாடப் பெற்றது. திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமை தாங்கினார். பல பத்திரிகாலயப் பிரதிநிதிகள், தமிழ் அறிஞர்கள், அரசியல் வாதிகள் விழாவில் பங்கு கொண்டனர். எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பெற்றது.

தமிழ் வணக்கத்துக்குப் பிறகு 'தமிழ் முரசு' துணையாசிரியர் திரு. ம. ரா. போ. குருசாமி விருந்தினரை வரவேற்றுப் பேசினார். திரு. கோவிந்தன் அவர்கள் திரு. வி. க., காமராஜ நாடார் ஆகியோருக்கு மாலை சூட்டினார். விழாவைத் துவக்கி வைத்துத் திரு. காமராஜர் 'முரசு'க்கு வாழ்த்துக் கூறினார். பின்னர் திருவாளர்கள் டி.கே.சி., வேங்கடாச்சாரி, த. செங்கல்வராயன், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியவர்கள் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பிறகு ஆசிரியர் ம. பொ. சிவஞானம் எல்லோருக்கும் நன்றிகூற விழா இனிது நிறைவெய்தியது.

திருவள்ளுவர் நினைவுநாள் :

இவ்வாண்டில் திருவள்ளுவர் நினைவுநாளைக் கொண்டாடுவதற்குச் சென்னை நகரில் விழாக் கழகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திரு. ம. பொ. சிவஞானம் தலைவராகவும், திரு. ஜானகிராமன் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விழா 9—2—47 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். நாவலர்—ச. சோமசுந்தர பாரதியார் தலைமை தாங்குவார். மற்ற விவரங்கள் அறிய விரும்புவோர் திருவள்ளுவர் கழகம், 3, முத்து முதலி தெரு, வேப்

பேரி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவும். நன்கொடை வழங்குவது தமிழர் கடமை.

தமிழ் மாகாணக் கோரிக்கை :

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச் சேர்ந்த அரிமழம் இலக்கிய வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, கடந்த டிசம்பர் 28-ந் தேதி நடைபெற்ற கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

" தமிழகம் தனி மாகாணமாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் தமிழர் வசிக்கும் தொகுதி அனைத்தையும் தமிழ்நாட்டுடன் சேர்க்கவேண்டு மென்றும் அரசியல் நிர்ணய சபையாரை இக்கழகம் கேட்டுக்கொள்கிறது."

'ஜெயகேரளம்' துவக்கவிழா

இந்திய அரசாங்கத்தில் உயர்ந்த பதவியிலுள்ள திரு. கே. பி. எஸ். மேனன் என்பவர் 'ஜெயகேரளம்' என்ற மலையாள வாரப் பத்திரிகையைச் சென்னை, இராயப்பேட்டையில் 4—1—47-ல் தொடக்கிவைத்தார். அப்போது அவர் பேசியதன் சாரம் வருமாறு : "மொழிவாரி இனப் பிரிவினையால் இந்தியப் பொது உரிமைக்குக் குந்தகம் ஏற்படுமென்று சிலர் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் துறையில் ஒருமையும், இனப் பண்பாடு என்ற வகையில் பன்மையும் ஒரே சமயத்தில் இருக்க முடியும். ரஷ்யாவை உதாரணமாகக் காட்டலாம். பல்வேறு முரண்பட்ட இன அரசுகள் அங்கே இருக்கின்றன; என்றாலும் ரஷ்யா முழுவதுக்கும் நிர்வாக ஒருமை இருக்கிறதல்லவா? அதுபோலவே இந்தியாவிலும் பல இனங்களும் தத்தம் தனி உரிமைகளைப் பெற வேண்டும். பண்பாட்டுப் பிரிவினைகள் இந்திய அரசியல் ஒற்றுமையை எந்த வகையிலும் பாதிக்கமுடியாது."

தமிழர் திட்டம்

புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

•

நமது நாட்டின் எல்லை பற்றி
நல்ல தீர்ப்புச் சொல்லுவோம் ;
தமிழ கத்தில் தமிழ ராட்சிச்
சங்கொலித்து வெல்லுவோம் !

•

வேங்க டத்தை எல்லை யாக்கி
வெற்றி மாலை சூட்டு வோம் ;
பாங்கு மிக்க நாஞ்சில் நாட்டின்
பகுதி சேர மீட்டு வோம் !

தமிழ் மணக்கும் சென்னை தன்னைத்
தலைமை யாகக் கொள்ளுவோம் !
சமயம் நோக்கிச் சுரண்டி வாழும்
தன்மை யோரைத் தள்ளுவோம் !

குமரி மீது தமிழ ராட்சிக்
கொடி பறக்க ஏற்று வோம் ;
இமய வெற்பில் கொடி பொறித்த
ஏந்தல் வீரம் போற்று வோம்.

கலைஞர் மல்கிப் புதிது காணும்
நிலைய மெங்கும் முற்று மே !
அலைகி ழித்துத் தமிழர் கப்பல்
உலக மெங்கும் சுற்று மே !

கொழித்த செல்வம் அயல வர்க்குக்
கொள்ளை போக விட்டி டோம்!
செழித்து நாளும் தமிழர் வாழச்
செய்வம் நல்ல திட்டமே.

•

வான வூர்தி தமிழ கத்தை
வைய மெங்கும் சேர்க்குமே;
தேனி கர்க்கும் தமிழி னோசை
தேச மெங்கும் ஆர்க்குமே!

அட்டைப்பட விளக்கம்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் திருவுருவப் படத்தை அட்டைப் பக்கத்தில் தாங்கி இம்முறை 'முரசு' வெளிவர நேர்ந்தது குறித்துப் பெருமகிழ்வு எய்துகிறோம். பெரியார் இன்று முதுமை எய்தி, பார்வை குன்றி இருக்கிறார் என்றாலும் 'தமிழ் முரசின்' ஒவ்வோர் இதழையும் பிறரைப் படிக்கச் செய்தேனும் தவறாது கேட்டு வருகிறார். இதற்குக் காரணம் திருவிதாங்கூர்த் தமிழர் விஷயத்தில் 'முரசு' கொண்டுள்ள முயற்சியே யாகும். திருவிதாங்கூர்த் தமிழகம் புதிய தமிழகத்தோடு சேரும் நன்னாளைப் பார்க்கக் கவிமணி ஆசை கொண்டுள்ளார். அவரது ஆசைக்குத் தமிழகம் ஆதரவு காட்டுமாக!

ஆலயப் பிரவேசம்

ம. போ. சி.

"மக்கள் தூங்கும் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்ததும் இந்நாடே" என்றார் பாரதியார். ஆம். விண்ணை இடிக்கும் கோபுரங்கள் எழுந்த கோயில்கள் நிறைந்தது தமிழ் நாடு. தமிழர் பணத்தால், தமிழர் உழைப்பால் தமிழ் நாட்டில் கட்டப்பெற்ற கோயில்கள் அன்று தமிழினத்தின் நல் வாழ்வுக்குப் பயன்படுத்தப்பட்டன. கீழ் மக்களையும் மேன் மக்களாகச் செய்யவேண்டும் என்பதே. சமயவாதிகளின் நோக்கம். ஆனால், பிற்காலத்தில் தமிழ் நாட்டு ஆலயங்களில் ஆதிக்கத்தைக் கைப்பற்றியவர்கள் தமிழரில் மேன்மக்களைக் கீழ் மக்களாக்கிய கொடுமையைத் தமிழர் ஒரு நாளும் மறக்க முடியாது. இன்று யாரெல்லாம் பறையர் என்று பழி கூறப்படுகிறார்களோ அந்தப் பறையர்கள்தான் பண்டை நாளில் வீர மறவர்களாகக் கருதப் பட்டார்கள். பார்த்தனின் மனம் அதிரப் போர்ப் பறை கொட்டிய அந்தக் கரம் இன்று சாப்பறை கொட்டுகின்றது. இன்று கோயிலில் எந்தப் பறையன் செல்லக்கூடாது என்று சொல்லப்படுகின்றதோ அந்தப் பறையனின் பரம்பரைதான் தமிழ் நாட்டுக் கோயில்களைக் கட்டியது என்பதை ஆதிக்கவாதிகள் அறியார்கள் போலும். இன்று நிலைமை மாறி வருகிறது. தமிழ் நாடு எங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமையைப் பெறுகின்றனர். இதை நாம் மனப் பூர்வமாக வரவேற்கின்றோம். ' கொடுமைக்கும் ஒரு முடிவுண்டு என்பதை உலகம் அறிந்துவிட்டது.

ஆனால் இந்த ஆலயப் பிரவேச இயக்கத்துக்கு ஆகமத்தில் ஆதாரம், சாத்திரத்தில் சான்று, வேதத்தில் வியாக்கியானம் இருப்பதால்தான் பழந் தமிழ் மக்களை ஆலயத்துக்குள் அனுமதிப்பதாக நம்பப்படுகிறது. உண்மையைச் சொன்னால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தீண்டாமை என்பது தமிழினத்தின் வீரத்தை நசுக்கச் செய்யப்பட்ட நாச வேலையே ஆகும். சேரன் கட்டிய கோயிலில் செங்கனுக்கு உரிமை தர, பாண்டியன் கட்டிய கோயிலில் அவன் வழி வந்த பறையனுக்கு உரிமை தர வடமொழி வேதங்களும் சாத்திரங்களும் விளக்கம் கூறவேண்டியதில்லை.

காந்தியடிகளின் சேவையும் காங்கிரசின் முயற்சியும் இல்லாவிடில் இந்த இயக்கம் இவ்வளவு விரைவில் வெற்றி பெற்றிருக்க முடியுமென்று யாரும் எண்ணுவதற்கில்லை. ஆனால், துரதிருஷ்ட வசமாகத் தீண்டாத மக்களின் வாழ்க்கை உயர்வு ஆலயப் பிரவேசத்தில் மட்டுமே அடங்கியிருக்கிறதென்று நம்புவதாகப் பல தலைவர்களுடைய பேச்சிலிருந்தும் செயலிலிருந்தும் தெரிகிறது. இது உண்மையானல், ஒன்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். அல்லது தாழ்த்தப்பட்ட அந்த மக்களை ஏமாற்றுவதாக இருக்க வேண்டும்.

ஆலயப் பிரவேசம் என்பது சமயத்தில் படிந்திருந்த மாசைத் துடைத்ததாகத்தான் கொள்ள வேண்டும். ஆனால், சமூக வாழ்வில் ஒடுக்கப்பட்ட மக்களுக்குள்ள அநீதியைப் போக்க வேண்டுமானல் அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்களை நாகரிக முள்ளவையாக்கி, அவர்களிடையே நிலவியுள்ள

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, கட்டாயக் கல்வி மூலம் அவர்களுடைய அறிவு நிலையை உயர்த்தி, ஆரோக்கியம் தரக்கூடிய குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்தால்தான் தீண்டாத மக்களுக்குத் தலைமுறை தலைமுறையாக நாம் செய்த கொடுமைகளிலிருந்து அவர்கள் விடுதலை பெற முடியும். இன்று ஆலயத் திறப்புகளுக்கு முன்னின்று பாடுபடும் பல பெரிய மனிதர்களை நான் நேரில் அறிவேன். அவர்கள் ஆதித் திராவிடர்களை ஆலயத்துக்குள் அழைத்துச் செல்வதில் காட்டும் அக்கறையில் ஐந்தில் ஒரு பங்கேனும் தங்கள் பண்ணைகளில் வேலை செய்யும் ஆதித் திராவிடர்களின் வாழ்க்கையை உயர்த்துவதில் செலுத்த முயல வேண்டும். ஆலயத்தைத் திறப்பதற்குச் சட்ட உதவி தரும் அரசாங்கத்தார் ஹரிஜன மக்களுக்கு ஆலைத் தொழிலைத் தேடித் தருவதில் அவசரம் காட்டவேண்டும்.

ஒரு காலத்தில்

தமிழ் நாட்டு எல்லை

●

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்"

—சங்க நூல்

‘அவனை அவர் பாடியது’

ம. ரா. போ. குருசாமி

தமிழினத்தவர் தலைசிறந்த பண்பாட்டுக்கு உரியவர். இவ்வுண்மையினைத் தெளிவுற விளக்க வல்லன பண்டைய சங்க காலத்து நூல்களே. இடைக்காலத்திலும் தமிழ் நூல்கள் எழுந்தன. அவை யாவும் தமிழ் மொழியிலே தான் அமைந்தன; எனினும் தமிழ் வழியிலே அமைந்தன அல்ல. ‘பொன் படைத்தோர் பெரியோர்’ என்ற பொய்க் கருத்தும், பொருளைப் பரிசிலாகப் பெறுதற் பொருட்டு என்னென்ன வேண்டினும் புலவர் செய்வர் என்ற பேதைமையும் இடைக்காலத்தில் பெருகலாயின. சங்கத்து நூல்களுக்குப் பின் எழுந்த நூல்களையும், புலவர் வரலாறுகளையும் நோக்கு மிடத்து இவ்வுண்மை தெற்றெனை விளங்கும். புரவலர் மன மகிழ்வே தம் வாழ்வுக்கு ஆதாரம் என்ற நிலை ஏற் பட்டதால் பல புலவர்கள் மிகமிக இழிந்த நிலைக்குக் காத லைக் கொண்டு விடுத்தார்கள்; எத்தனையோ புலவர்கள்—குறள் படித்தும் கூட—இரப்பது புலவர் தொழில் என்ற அளவுக்குத் தமிழை இழிவுபடுத்தினர்.

சமூகத்தின் மனப் பண்பு இழிநிலை அடைந்ததே இதற்கெல்லாம் காரணமாகும். புலவர் வாய்மொழியே ஓர் இனத்தின் பெருமையை ஆக்கி, நிலைநிறுத்த வல்லது என்ற கருத்தைத் தமிழ் மக்கள் மறந்தனர். அது காரணமாகப் புலவர் நிலையும் இழிந்தது; பண்பாட்டின் தரமும் குறைந் தது; யாவற்றினும் மேலாக இலக்கியத்தின் சிறப்பு இழி வடைந்தது.

ஆனால், சங்க நூல்களைப் பார்க்குங்கால் இத்தகைய இழிநிலையைக் காண இயலவில்லை. மன்னன் வஞ்சினம் கூறினால்,

'மாங்குடி மருதன் தலைவன் ஆகப்
புலவர் பாடாது வரைக என் நிலவரை'

என்று 'புலவர் பாராட்டு ஒழிவதாக' என இழிவின் எல்லையைச் சுட்டிக் காட்டினான்.

அரசின் சிறப்பை விளக்குவதும், வெற்றியினை உலகறியச் செய்வதும், பகைவர் நெஞ்சினைப் பதைபதைக்கச் செய்வதுமான 'முரசு' இருக்க வேண்டிய கட்டிலில் எவன் இருந்தாலும் கொலைத் தண்டனைக்கு ஆளாக வேண்டும். ஆனால், புலவன் ஒருவன் படுத்து உறங்கியது கண்ட மன்னவன் துயில் இனிதாகுமாறு சாமரை வீசினான். புலமைக்கு தமிழுக்கு—ஆற்றிய தொண்டு!

இத்தகைய நிகழ்ச்சிகள் இன்னும் எத்தனையோ உண்டு. எல்லாம் புலவர்க்குப் புரவலர் செய்த சிறப்பை விளக்குவன; பண்டைத் தமிழர் தமிழுக்குக் காட்டிய உயர் மதிப்பைப் புலப்படுத்துவன.

'இரவலர் புரவலன் நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்'

என்று வீறுகொண்டு பேசிய புலவர்கள் பண்டைக் காலத்தில் இருந்தனர். அவர்களைத் தமிழ் இனத்தவர் போற்றினர். சங்க நூல்களைப் படித்து இவ்வுண்மை தெளியலாம்.

புறநானூறு—என்ன என்பது தெரியும். அந்நூலிலுள்ள ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் இன்னாரை இன்னார்

(உ௬-ஆம் பக்கம் பார்க்க)

நாட்டு நடப்பு

'ஒற்றன்.

அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டம் முற்றுப் பெற்றுவிட்டது. தலைவரைத் தேர்ந்தெடுத்ததும், சபையின் நடைமுறை விதிகளை வகுத்ததும்தான் அது செய்த காரியங்கள். இந்தியாவின் இலட்சியத்தைக் குறிக்கும் குடியரசுத்தீர்மானம், விவாதத்துக்குப் பிறகு தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. லீகர்களின் வருகையையும் சமஸ்தானாதிபதிகளின் சம்மதத்தையும் எதிர்பார்த்து நிற்கிறது, அத்தீர்மானம்.

இனி, தமிழ் நாட்டிலிருந்து சென்றவர்கள் நிலையைக் கவனிப்போம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மாஜி ஊழியர்களான சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், சர். என். கோபாலசாமி ஐயங்கார் இருவரைத் தவிர மற்றவர்களைப் பற்றித் தகவலே இல்லை. மேலே சொன்ன 'சர்' பட்டதாரிகள் உண்மையான காங்கிரஸ்காரர்களைவிட அதி தீவிரவாதிகளாகப்பேசினர். சமஸ்தான மன்னர்களின் ஆதிபத்திய உரிமைகளை அடியோடு மறுத்துப் பேசினர். கோபாலசாமி ஐயங்கார். காஷ்மீரின் மாஜி திவான்தான் இப்படிப் பேசினர் என்றால் அது ஒரு புரட்சிதானே! அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தினரான பிறகுதான்—காங்கிரஸ் தலைவர்கள் அரியாசனத்தில் ஏறிய பிறகுதான்—ஐயங்கார் அவர்களுக்குக் கடந்த காலத்தில் தாமே தாங்கிப் பிடித்த சமஸ்

தானங்களின் ஆதிபத்திய உரிமை அநீதியாகப் படுகிறது. [இதே அல்லாடிதான் 1943-ல் பெடரல் கோர்ட்டின் உத்தரவுக்குமேலும் அவசரச் சட்டம் பிறப்பிக்க வைசிராய்க்கு அதிகாரம் உண்டு என்று பெடரல் கோர்ட்டில் வைசிராயின் சார்பாக வாதாடினார் ; இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 26—வது பிரிவுக்கு உயிரளித்தார். அந்தப்பிரிவின்கீழ்க் காவற்கைதிகளாகச்சிறையில்வாடிவதங்கிய தேசபக்தர்களின் வயிற்றெரிச்சலைத் தேடிக்கொண்டார். அந்த அட்வகேட் அல்லாடியை மறந்து விடுவோம். இப்போது காட்சியளிப்பவர் 'தேசபக்த' அல்லாடி.

இராஜ பக்திக்கும் தேச பக்திக்கும் இடையே மிகப் பெரிய வேற்றுமை உண்டென்று நம்பியிருந்தோம். இல்லை, இல்லை. ஒரே உடலில் இராஜ பக்தியும் தேச பக்தியும் மாறிமாறிக் காட்சி யளிக்கும் என்பதை இப்போது உணர்ந்து விட்டோம்.

" அ. ஸ. சபையின் நடவடிக்கைகள் இந்துஸ்தானியிலேயே நடைபெற்றதால் தென் இந்தியர்களாகிய நாங்கள் அன்னியர்களைப்போல அமர்ந்திருந்தோம் " என்று சென்னைக் கூட்டமொன்றில் சோகக் குரலில் கூறினார் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார். அந்த அளவுக்கு அமர்வதற்கேனும் இடம் கொடுத்தார்களே அந்தச் சபையில் என்றுதான் நமக்குத் தோன்றுகின்றது. " இந்துஸ்தானி தெரியாதவர்களுக்கு இந்தியாவிலேயே இடமில்லை" என்று திரு.துலேக்கர் கூறியதை மௌனமாக ஆமோதித்த சபைதானே அது ! மறுத்துப் 'பேசாது மௌனம் சாதித்தவர்கள்தானே நமது பிரதிநிதிகள் ?

அ. நி. சபையின் தலைவர் பதவி சர். என். கோபால சாமி ஐயங்காருக்குக் கிடைக்கப் போவதாகச் செய்திகள் வந்துகொண்டேயிருந்தன. நாமும் நம்பினோம். அரசியல் ஞானத்தில்—ஆங்கிலப் புலமையில், தென் இந்தியரிடம்—அதிலும் தமிழ் நாட்டவரிடம்—யார் போட்டியிடமுடியும் என்று இறுமாந்திருந்தோம். முடிவில் ஏமாந்தோம். "சபையின் நடவடிக்கை இந்துஸ்தானி, உருது ஆகியவற்றில்தான் பெரும்பாலும் நடக்குமாதலால் இந்துஸ்தானி தெரியாத தென் இந்தியரை ஏற்க முடியாது" என்று சொல்லி விட்டாராம் சர்தார் பட்டேல். பாவம்! சர். என். கோபாலசாமி ஐயங்காரும் கடைசி நேரத்தில் தமது தகுதியின்மையை ஒப்புக்கொண்டு ஆசையை அவமானச் சிமிழில் வைத்து அடைத்து விட்டாராம்.

ஆனால், நமது ஆந்திரச் சிங்கம் சும்மா இருக்கவில்லையாம். "பட்டேல் என்ன சொன்னாலும், ஒருகை பார்த்தே தீருவேன்" எனத் தலைவர் தேர்தலுக்கு நின்றாராம். ஆனால், ஆமோதிக்க ஆள் கிடைக்காத காரணத்தால் நியமனச் சீட்டு செல்லுபடி ஆகாதெனத் தள்ளுபடி செய்தாராம், தலைவர் சின்ஹா.

"இந்துஸ்தானி தெரியாதவர்களுக்கு அரசியல் நிர்ணய சபையில் என்ன, இந்தியாவிலேயே இடமில்லை" என்று துலேக்கர் சொன்னார். சர்தார் பட்டேல் நம் மீது கொண்ட கருணையால் "இந்துஸ்தானி தெரியாவிட்டாலும் இந்தியாவில் இருக்கலாம்; அரசியல் நிர்ணய சபையிலும் அமரலாம். ஆனால், பதவிமட்டும் கிடையாது" என்றதிருத்

தத்தைக் காரியத்தில் காட்டிவிட்டார். "வட நாட்டு அரசியல் வாதிகளின் உள்ளத்தில் உள்ளதைத்தான் துலேக்கர் வெளிப்படையாகக் காட்டினர்" என்று அகில இந்தியச் செல்வாக்குள்ள தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஒருவர் என்னிடம் கூறினர். அதே தலைவர் தொகுதியைப் பற்றியும் பின் வருமாறு கூறினர். "கட்டாயத் தொகுதி முறையை ஏற்பதென்று காங்கிரஸ் முடிவு செய்து விட்டால் 'எ' தொகுதியை இன்னொரு துண்டு போட்டு 'டி' தொகுதி ஒன்று சிருஷ்டித்தா லொழிய, தென் இந்தியா உயிர்வாழ முடியாது" என்ருர். மேலும் அவர் கூறுகையில், "நமது தென் இந்தியாவில் நடக்கும் ஆரியர்-திராவிடர் என்ற அர்த்தமற்ற சண்டையை நிறுத்திவிட்டு இங்குள்ள கட்சிகளும் இனங்களும் ஒன்றுபட்டால் தென் இந்திய சமஷ்டி ஒன்றை அமைக்க இது பொன்னன நேரம்" என்ருர்.

"மொழிவாரி மாகாணங்களைப் பிரிப்பதைப் பற்றி அ. நி. சபை இப்போது கவனிக்கப் போவதில்லை. புதிய அரசியல் அமைப்பின் கீழ்தான் அது கவனிக்கப்படும்" என்று அ. நி. சபையின் தமிழ் நாட்டு அங்கத்தினர் ஒருவர் கூறுகிருர். மற்றும், இதில் பட்டேல் அசைக்க முடியாத உறுதியுடன் இருக்கிருராம். "பட்டேல் சொன்னலும், ஆந்திர மாகாணத்தை அமைத்தே தீருவோம்; அ. நி. சபை தனது முதல் வேலையாக இதை எடுத்துக்கொள்ளாவிட்டால் அது கூடுவதைவிடக் கூடாமல் இருப்பதே நல்லது" என்றெல்லாம் அ. நி. சபை கூடுவதற்கு முன்பு ஆரவாரம் செய்துகொண் டிருந்த டாக்டர் பட்டாபி கூட இப்பொழுது 'இதைப்பற்றிப் பேசுவதே காணும். பட்டேலின் கட்டளைக்குப் பணியாதார் யாவரே?

பொதுவாக அ. நி. சபையின் முதற் கூட்டத்தைப் பற்றி நாம் ஊர்சுற்றி உளவறிந்ததில் தெரிந்து கொண்டது இதுதான் :

> தென்னாட்டு அங்கத்தினருக்குள் சரியான கட்டுப்பாடு இல்லை. மற்ற எல்லா மாகாணத்தவரும் தங்களுக்குள் ஒரு தலைவரை ஏற்படுத்திக் கொண்டு அவர் சொற்படி தங்கள் தங்கள் மாகாணங்களின் அபிப்பிராயத்தைக் கட்டுப்பாடாகத் தெரிவிக்கின்றனர். சென்னை மாகாணத்தவர் அப்படி இல்லை. எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்கின்றனர். சபையின் நடவடிக்கைகளே இவர்களுக்குப் புரிவதில்லை. இந்துஸ்தானி அடியோடு தெரியாது. ஆங்கிலத்தில் பேசுவதற்கோ வெட்கம். தாய் மொழியில் பேசுவதற்கும் தைரியம் இல்லை. இந்த நிலையில் இவர்களை ஏனென்று கேட்க ஆள் இல்லை.

எப்படியோ தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளும் அ. நி. சபைக்குப் போனார்கள் ; வந்தார்கள். மீண்டும் போகவும் போகிறார்கள். "என் செயலாவது யாதொன்று மில்லை" என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் உணர்ந்தே இருக்கிறார்கள்.

இந்தியாவின் தலைசிறந்த ராஜதந்திரியாகிய ராஜாஜியைப்பற்றி இப்போதெல்லாம் ஒன்றும் செய்தியே வருவதில்லை. அ. இ. கா. கமிட்டி நடவடிக்கைகளிலாகட்டும், அ. நி. சபையின் நிகழ்ச்சிகளிலாகட்டும், வங்காளத்தில் காந்தியடிகளைச் சந்திக்கும் காங்கிரஸ் தூதுக் குழுவினரின் வரிசையிலாகட்டும் ராஜாஜியின் பெயர் வருவதேயில்லை.

டில்லியில் நடைபெறும் "கள்வனின் காதலி" என்ற தமிழ் நாடகத்தில் பேசுவதும், ஜாம்ஷெட்பூர் தமிழர்களிடையே வரவேற்புப் பெறுவதும், தமிழ் நாட்டு ஆலயப் பிரவேசத்தில் ஆனந்தமடைந்த செய்தி அனுப்புவதுமாக தான் அவரைப்பற்றி அறிய முடிகிறது.

அப்படியானல் அ. இ. அரசியலில் தமிழரின் கதி என்ன ? தமிழர்களே, சிந்தியுங்கள்.

தமிழ் அரசு

நாமக்கல் கவிஞர்

[1946 - ஆம் ஆண்டு டிசம்பர் 14, 15 தேதி களில் சென்னையில் கூடிய தமிழ் எழுத்தாளர் மகா நாட்டைத் துவக்கிவைத்துப் பேசியவர் நாமக்கல் கவிஞர்-வெ. இராமலிங்கம் பிள்ளை யாவார்.

நூல் வடிவில் அச்சடிக்கப்பட்ட அவரது நீண்ட சொற்பொழிவில் தமிழில் வடமொழி கலப்பது கூடாதென்று கூறுவதையும், தமிழ் நாட்டுப் பிராமணரை ஆரியரென்று கூறுவதையும் அழுத்தமாகக் கண்டித்தார். இவற்றை எல்லாத் தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளும் விளக்கமாகப் பிரசுரித்தன. "ஹிந்து" தலையங்கம் எழுதி, கவிஞரைப் பாராட்டியது.

ஆனால், தமிழ்ப் பண்பாட்டின் தனி இயல்பு, தமிழ் மாகாணப் பிரிவினை, தமிழகத்தில் தனியரசு ஆகியவைகளைப்பற்றிக்கவிஞர்கூறியவற்றைப்பெரும் பாலான பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை. அவற்றை மட்டும் நாம் இந்த வெளியிடுகிறோம் - ஆசிரியர்]

தமிழ்ப் பண்பு

ஒவ்வொரு மனிதனுக்கும் இயல்பான ஒரு குணம் உண்டு. ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தனியான வழக்க

முண்டு. ஒவ்வொரு சமூகத்துக்கும் ஒரு சம்பிரதாய முண்டு. ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு சரித்திரம் உண்டு. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு போக்கு உண்டு.

தமிழ்ப் பண்பு என்பது, தமிழ் மக்களின் இயல்பும் தமிழ் நாட்டுச் சரித்திரத்தின் மரபும், தமிழ் மொழி இலக்கியங்களின் போக்கும் ஆகிய இந்த மூன்றும் கலந்து தொகையான குணம்.

பிற பண்புகளுடன் வேறுபாடு

இந்தத் தமிழ்ப் பண்பை, பிறமொழி இலக்கியங்களைப் பக்கம் பக்கமாக வைத்துப் படித்துப் பார்த்து அவற்றி லுள்ள வேற்றுமைகளைக் கவனிக்கிறபோது எளிதாகக் காண லாம். வியாச பாரதத்தையும், வில்லிபாரதம் அல்லது பெருந் தேவனார் பாரதத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தத் தமிழ்ப் பண்பு அங்கங்கே சிறிது காணப்படும். வடமொழி யிலுள்ள நளன் கதையையும் புகழேந்தி பாடிய நளவெண் பாவையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தத் தமிழ்ப் பண்பை முன்னிலும் அதிகமாகக் காணலாம். வான்மீகி ராமாயணத் தையும் கம்ப ராமாயணத்தையும் அவற்றுள் ஒப்புக் காண்பதே அரிது. கதா பாத்திரங்களாகிய பேர்களும் ஊர்களும் தவிர மற்றெல்லா நிகழ்ச்சிகளும் கதைப்போக்கும் கதா பாத்திரங்களின் குணங்களும் நடவடிக்கைகளும் மாறுபட் டிருக்கும். இந்த மாறுபாடுகள் அனைத்தும் தமிழ்ப் பண் பினால் தரப்பட்டவை என்பது தெரியும். வடமொழி இலக் கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர்க ளெல்லாம் இந்த இலக்கியங்களின் முக்கியக் கருத்துக்களைமட்டும் வைத்துக் கொண்டு மற்றவற்றை யெல்லாம் தமிழ்ப்பண்புகளோடு கூட்

டியே தமிழராக்கி யிருக்கிறார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் இந்தப் பண்பு வேறுபாட்டைப் பார்க்கலாம்.

தமிழ் நாட்டுக் கிறிஸ்தவருக்கும் மற்ற நாட்டுக் கிறிஸ்தவருக்கும் பல வித்தியாசங்கள் உண்டு. தமிழ் நாட்டு மகமதியருக்கும் மற்ற நாட்டு மகமதியருக்கும் மாறுபாடுகள் உண்டு. தமிழ் நாட்டுப் பௌத்தருக்கும் வேறு நாட்டுப் பௌத்தருக்கும் வேற்றுமை உண்டு. மற்றச் சமயங்களும் அப்படியே. ஒரே சமயத்திலும் தமிழ் நாட்டுச் சைவம் வேறு; வடநாட்டுச் சைவம் வேறு. தமிழ் நாட்டு வைணவம் வேறு; வடநாட்டு வைணவம் வேறு. இந்த வேற்றுமைகளுக்கெல்லாம் தமிழ் நாட்டில் வசிப்பவர்களுடைய வாழ்க்கையில் இந்தத் தமிழ்ப்பண்பு கலந்திருப்பதே காரணம்.

தமிழ் மாகாணப் பிரிவினை

தமிழ் நாடு ஒரு தனி மாகாணம் ஆகவேண்டும். அதில், தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்குமே ஆதிக்கம் இருக்கவேண்டும். அன்றியும் திருவிதாங்கூரின் தெற்கிலும், தென் கிழக்கிலும் தமிழர்களே பெருந்தொகையினராக இருக்கிற பகுதிகளையும் தமிழ் மாகாணத்தோடு சேர்க்கவேண்டும். தமிழ் நாடு என்று சொல்லும்போது வெறும் இறந்தகால உண்மைகளைமட்டும் எண்ணாமல் நிகழ்கால நியாயங்களையும் எதிர்கால நோக்கங்களையும் சேர்த்து எண்ணவேண்டும். ஆகையால் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் மிகுதியாக உள்ள பகுதிகளை யெல்லாம் தமிழ் மாகாணத்தோடு சேர்க்கவேண்டும் என்பதுதான் சரியான நியாயமாகும். அந்த முறையில் ஒரு தமிழ் மாகாணத்தை நிறுவி, தமிழர்களின் தனி முறையில் கலைகளையும், கல்வியையும் பெருக்கி, தமிழ் அரசு நடத்தி, தமிழர்களுடைய பெருமைகளுக்குக் காவல் புரிவோம்.

பெருநோக்கு வேண்டும்

ஆனால், 'தமிழ் மாகாணத்தில் தமிழன் தனியரசு கொண்டபின் இந்திய நாட்டை மறந்துவிடக் கூடாது. நாம்

இந்தியாவின் பொது நலத்தையும் போற்றவேண்டும். இந்திய நாட்டின் இந்த முழுமையைப் பாரதியார்.

முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்பும் மொழிபதி னெட்டுடையாள், எனில்
சிந்தனை ஒன்றுடையாள்

என்று பாடி யிருக்கிறார்.

தமிழ் நாடு தனியரசான பின்னும் இந்த எண்ணம் நம்முடைய மனத்தில் மாறாதிருந்தால்தான் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற கோஷத்தினால் தவறு வராது.

தமிழ் நாட்டில் தாய்மொழி தமிழல்லாத அநேக வகுப்பார்கள் நெடுங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் அருந்ததியர் (தாய் மொழி தெலுங்கு), சேணியர்கள் (தாய் மொழி கன்னடம்), ஆரிய வைசியர்கள் (தாய் மொழி தெலுங்கு) சௌராஷ்டிரர் (தாய்மொழி சௌராஷ்டிரம்) முதலானவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள். இவர்கள் தொகை தனித்தனி லட்சக்கணக்கிலிருக்கிறது இவர்களைவிடச் சிறு தொகை மற்ற மொழிக்காரர்களும் உண்டு. மேலே சொல்லப்பட்டவர்களுக்குத் தாய் மொழி தமிழல்லா விட்டாலும் அவர்கள் எல்லா விதத்திலும் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக் கெல்லாம் ஓர் அநீதி நேர்ந்துவிடக் கூடாது.

ஜனநாயகப் பஞ்சாயத்து

தமிழ் நாட்டில் நடக்கப்போகிற தமிழ் மாகாண அரசாட்சி தமிழை அரசாங்க மொழியாகக் கொண்டு தமிழ் மரபும் தமிழ்ப் பண்பும் தவறாத முறையில் நடத்தப்படுகிற ஒரு ஜனநாயகப் பஞ்சாயத்தாகத்தான் இருக்கவேண்டும். இந்த ஜனநாயகப் பஞ்சாயத்து முறைதான் சேர, சோழ,

பாண்டிய மன்னர்கள் காலத்திலும் நடந்தது. அவர்களுக்குச் சில தனி அதிகாரங்கள் இருந்தாலும் அரசாங்கத்தின் தினசரி நடப்பு அதிகாரங்கள் முற்றிலும் 'ஐங்குழு' என்ற பஞ்சாயத்துக்களிடத்தில்தான் இருந்தது. இதைப்பற்றிய பல ஆராய்ச்சிகள் இருக்கின்றன. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் இருந்த அரசியல் முறைகளையும் அதனால் மக்களுக்குள் இருந்த அமைதியையும், அப்போது வளர்ந்த கலைகளையும், அதனால் விரிந்த நாகரிகத்தையும் புகழ்ந்து, சில ஐரோப்பிய எழுத்தாளர்கள் விதம் விதமாக வியந்து எழுதி யிருக்கிறார்கள்.

பழைய பெருமையைப் பாதுகாப்போம்

தமிழ்நாடு தனி மாகாணமாகித் தமிழ் மக்கள் தனி அரசு கொண்டு தமிழ்மொழி ஆட்சிபுரிய வேண்டுமானால் சேரனும் சோழனும் பாண்டியனும் காட்டிய செந்நெறிகளில் செல்லவேண்டும். அவர்கள் விட்டுப்போன அறங்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் போற்றிவைத்த இலக்கியங்களிற் பொதிந்து கிடக்கும் நல்லுணர்ச்சிகள் நம்மதாக வேண்டும். அப்போதுதான் சேரன் செய்ததுபோல வடநாட்டையும் வணங்க வைக்கமுடியும். அப்போதுதான் பாண்டியனைப்போலச் சங்கம் வளர்க்க முடியும். அப்போது தான் நெற்றிக் கண்ணுக்கும் அஞ்சாது குற்றம் கடிந்த நக்கீரனைக் காணமுடியும். அப்போதுதான் கொடுங்கோலை வீழ்த்திய கண்ணகியைப் போன்ற பத்தினிக் கடவுளைப் பார்க்கமுடியும். அப்போதுதான் இளங்கோவைப்போன்ற எழுத்தாளர்கள் உதிப்பார்கள். திருவள்ளுவரைப்போன்ற மகாத்மாக்கள் தோன்றுவார்கள். கம்பனைப்போன்ற கவிஞன் பிறப்பான். அப்போதுதான் பல மொழிகளில் வல்ல

வணுகி, பத்தே நாளில் பிறமொழிப் பண்டிதனுகி, வாதுக்கு வந்தவர்களை வணங்கச் செய்து வடநாட்டு மன்னனிடம் வரிசைகள் பெற்ற குமரகுருபரரைப் போன்ற தமிழறிஞர் களைக் காணலாம்.

(கஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடியது என்ற விளக்கம் காணலாம், அவ்விளக்கத் தொடர்களில் பல,

'அவனை அவர் பாடியது'

என்றே இருக்கக் காண்போம். அஃதாவது முன் பாடலைப் பாடியவரே அதே செம்மலைப் பற்றிப் பாடியது என்பதாகும். இங்கே உள்ள 'அவன்', 'அவர்' என்ற சொற்களின், இறுதி எழுத்துக்களைக் காணுதல் வேண்டும். அவன் என்று குறித்தது வேலொழுகும் போர்க்களத்தில் அருஞ் சமர் ஆற்றி வெற்றி கண்ட மன்னனை. அவர் என்று குறித்தது மன்னவன் அவையை நாடித் தமிழ் பரப்பிய புலவனை.

உலகு புரக்கும் வேந்தன் அவன். அவனை நாடிப்பிழைக்கும் புலவன் அவர். எப்படி? இது தமிழர் பண்பாடு; சங்க இலக்கியச் சிறப்பு.

அன்னைக்கு - ௩

மு. வரதராசன்

அன்புள்ள அம்மா !

நான் எதிர்பார்த்ததற்கு மாறாகவே உன் பதில் வந்தது. இவ்வளவு காலம் உன்னோடு பழகியிருந்தும் உன் மனத்தைத் தெரிந்துகொள்ளாதது உண்மையாகவே என்னுடைய குறைதான். இருளிலே கிடந்த எனக்கு ஒளிகாட்டுவதுபோல் இருக்கின்றன உன்னுடைய அருமைக் கருத்துக்கள். அவற்றைப் படித்து உணர்ந்தபின், என் அறிவிலேயே ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டுவிட்டது. ஏன்? என்னுடைய மூட நம்பிக்கையே தொலைந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

கல்லூரிகளில் கல்லாதவர்களிடத்திலும், நாகரிகம் இல்லாதவர்களிடத்திலுமே மூட நம்பிக்கை வாழ்வதாக நான் இதுவரையில் எண்ணிக்கொண்டிருந்தேன். பல்லி சொல்லுவதைக் கேட்டுப் பதைப்பவர்களையும் பூனை குறுக்கே வரக் கண்டு கலங்குகின்றவர்களையும் மட்டுமே மூட நம்பிக்கை உடையவர்கள் என்று எண்ணிவந்தேன்; இப்போதுதான் உண்மை தெரிந்துகொண்டேன். அடுக்கடுக்காக நூல்களை வாங்கிப் படித்தவர்களிடமும், பட்டமும் புகழும் பெற்றவர்களிடமும் மூட நம்பிக்கை வேறு வேறு வடிவில் வாழ்வதாக உணர்கின்றேன். கல்லாதவன் பல்லி சொல்லுவதை நம்பித் தன் வாழ்க்கையை அளப்பது போலவே, கற்றவன் பத்திரிகை சொல்லுவதை நம்பி ஏமாறுகின்றான். தலைமுறை தலைமுறையாக வந்த சில பழக்கங்களை வைத்துக்கொண்டு படிக்காதவன் தயங்குகின்றான். கட்சித் தலைவர்கள் சொல்லும் சில கருத்துக்களைக் கேட்டு மயங்கி, படித்தவன்

தயங்குகின்றான். அவனும் எண்ணிப்பார்த்து ஏற்றுக் கொள்வதில்லை. இவனும் அப்படித்தான் கண்மூடி வாழ்வு நடத்துகின்றான்.

அம்மா! எதையோ எழுதுகின்றேன் என்று எண்ண வேண்டாம். என்னுடைய சொந்த மூட நம்பிக்கையைத் தான் இங்கே குறிக்கின்றேன். இந்த மூட நம்பிக்கை, இன்று பத்திரிகை படிக்கின்ற எல்லோருக்கும் பெரும்பாலும் உரிமையானதாகவே இருக்கின்றது என்று சொல்வதில் தவறு உண்டா? நானும் அந்தக் கூட்டத்தில் ஒருவன். அதனால் தான் இதுவரையிலும் அப்படி எண்ணி வந்தேன்.

"இன்று நம் நாட்டில் நடப்பது மதச் சண்டை அல்ல; இனச் சண்டை. மதம் உயர்ந்த உண்மைகளை அடிப்படை யாகக் கொண்டது. இனம் என்பதோ சில பழக்க வழக்கங் களையும் நிறம் முதலியவைகளையும் அடிப்படையாகக் கொண்டது. எல்லாரும் தவருக மத வேற்றுமை கூடாது கூடாது என்று அறிவுறுத்துகின்றார்கள். அது பொருளற்ற முயற்சி. பொது மக்கள் மதத்தின் உண்மைகள் தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் பழக்க வழக்கங்களின் வேற்றுமையைத்தான் பாராட்டிக்கொண்டு பிரிந்து கலகம் செய்கின்றார்கள். அதற்கும் காரணம் ஒன்றுதான்; செல் வத்திலும் செல்வாக்கிலும் போதுமான பங்கு தங்கள் இனத் துக்கு வேண்டும் என்பதுதான்" என்று நீ எழுதிய அந்தப் பகுதியைத் தனியே கத்தரித்து எடுத்து ஒரு நல்ல அழகான அட்டையில் ஒட்டித் தொங்கவிட்டிருக்கிறேன். அதை விடுதி மாணவர்கள் வந்து படித்துவிட்டுப் போகின்றார்கள்.

அவர்களில் ஒருவன்—என் நண்பன்தான்—என்னை ஒரு கேள்வி கேட்டான். அவனுடைய மூட நம்பிக்கையின்

ஆழம் அப்போதுதான் தெரிந்தது. "பழக்க வழக்கங்கள் இல்லாமல் மதம் என்பது என்ன?" என்று என்னைக் கேட்டான். நான் அவனைப் பார்த்து, "இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; சீனுவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு; இந்தியாவில் உள்ள கிறிஸ்தவனுடைய பழக்க வழக்கங்கள் வேறு. ஆனால் மூவருடைய மதமும் ஒன்றே; ஆனால் அவர்கள் மூவரும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா?" என்று சொன்னேன். அதற்குள், பக்கத்தில் இருந்த மற்றொரு நண்பன், "அந்த மூன்று பேரும் கிறிஸ்தவர்கள் என்பதுமட்டும் உண்மையா? கிறிஸ்துவின் உயர்ந்த கொள்கைகள் அவர்களுடைய வாழ்க்கையில் உண்டா? கிறிஸ்தவன் என்று உலகத்தில் பிறந்தவர் ஒருவரே. அவரும் சிலுவையில் மாண்டார். இப்படித்தான் பெர்னர்ட்ஷா சொல்கிறார்" என்று வெடிகுண்டுபோல் எடுத்துச் சொன்னான்.

எப்படியாயினும், ஆராய்ந்து பார்த்தால், நாட்டில் நடப்பது மதச் சண்டை அல்ல என்று முடிவுக்கு வந்தோம். மற்றவர்கள் சொன்னதை அப்படியே கேட்டு, எண்ணுமல் ஏற்றுக்கொண்டு இதுவரையில் மதச் சண்டை என்று நம்பி வந்தோம். இப்போது உண்மை நன்ருகத் தெரிகின்றது. சமயத் துறையில் ஆராய்ச்சியும் அன்பும் உடையவர்கள் மிக மிகச் சிலரே. அந்தச் சிலர் எந்தக் காலத்திலும் கலகம் செய்வதே இல்லை. சமய வேறுபாடும் அவர்கள் வாழ்வுக்கும் அறிவுக்கும் தோன்றுவதே இல்லை. எங்கும் உண்மை இருப்பதாக அவர்கள் எடுத்துச் சொல்கின்ருர்கள்; எல்லோரிடமும் அன்பாக அவர்கள் பழகுகின்ருர்கள். உண்மை உணராதவர்களே பிணக்கும் பூசலும் வளர்க்கின்ருர்கள்.

நீ சொல்கின்றபடி ஆராய்ந்து பார்த்தால், கலகம் செய்கின்ற யாருக்கும் மதத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற எண்ணமே இல்லை. ஆனால் செல்வமும் செல்வாக்கும் தேடிக் கொள்ளவேண்டும் என்ற போட்டிப் பூசல்தான் இது.

இந்தப் போட்டிப் பூசலை மதத்தின் பெயரால் நடத்தி; அரசியல் நிர்ணய சபைவரையிலும் எட்டவைத்து, லண்டன் பாராளு மன்றமும் ஆராய வைத்ததுதான் வியப்பாக உள்ளது. நாட்டின் செல்வத்தையும் செல்வாக்கையும் பங்கிட்டுப் பிரித்துக்கொள்வதில் மக்களுக்கு உள்ள ஆசை என்றுதான் இதைச் சொல்லவேண்டும்.

ஆசை என்றும் ஏன் சொல்ல வேண்டும்? கடமை என்றும் சொல்லலாம்போல் தோன்றுகின்றது. பொருள் தேடும் போட்டிக்கு இடம் கொடுத்து, அதை மேன்மேலும் தூண்டி வருகின்ற உலக அமைப்பில் அதைக் கடமை என்று சொல்வதே பொருத்தமாகத் தெரிகின்றது. தந்தையும் நீயும் அமைதியாக இருந்து பாட்டனார் செல்வத்தைப் பங்கிட்டுக் கொள்ள வில்லையா? அது கடமை என்றுதானே எண்ணிச் செய்தீர்கள்? ஆனால், சிற்றப்பா கவலைகொண்டு, நம்பிக்கை இழந்து கலகம் செய்தார். அவருடைய ஏக்கம் அவ்வாறு ஆத்திரப்படச் செய்தது.

நான் நேற்றுமாலை மண்ணடித் தெருவுக்குப் போய்த் திரும்பிவந்தபோது கண்ட ஒவ்வொரு காட்சியிலும் உன் கடிதமே நினைவுக்கு வந்தது. இரும்புப் பெட்டிக் கடைகளை வழியில் பார்த்தேன். வாங்குகின்றவர்கள் யார் என்று எண்ணினேன். "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்ற உண்மையைத் தெரிந்துகொண்டவர்கள் அவர்கள்.

திருடர் கையில் அகப்படாதபடி தங்கள் செல்வத்தை இரும்புப் பெட்டிக்குள்ளே வைத்துக் காக்க விரும்புகின்றவர்கள் அவர்கள். பூட்டுக் கடைகளைப் பார்த்தேன். மாகாணங்களைத் தனித்தனியே பிரித்துக்கொண்டு காப்புத் தேடிக் கொள்ளச் சில இனங்கள் பாடுபடுகின்றன. தனி மக்கள் இந்தப் பூட்டுக்களையும் அந்த நோக்கத்தோடுதான் வாங்குகின்றார்கள். பிராட்வே வழியாக வந்தபோது சில கடைகளுக்கு அமைந்திருந்த உறுதியான இரும்புக் கதவுகளைப் பார்த்தபோதும் இந்த நினைவே வந்தது. சைனாபஜாரைக் கடந்து கோட்டையை நோக்கி நடந்தபோது சில உயர்ந்த வன்மையான கட்டிடங்களைக் கண்டேன். நீ சென்ற ஆண்டில் வந்தபோது உனக்கு அவைகளைக் காட்டினேன். நினைவு இருக்கும் என்று நம்புகின்றேன். அந்த நிதி நிலையக் கட்டிடங்களையும் அவற்றின் உறுதியையும் எண்ணியபோதும் உன் கடிதமே நினைவுக்கு வந்தது. செல்வத்தைத் தேடிக் காத்துக்கொள்வதில் உள்ள ஆசையை—அல்ல, அல்ல, கடமை உணர்ச்சியை அவை காட்டுகின்றன. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்பதை அடிப்படையாகக்கொண்டு, பிறர்மேல் நம்பிக்கை இல்லாமல், தனி மனிதர் இரும்புப் பெட்டியைத் தேடுகின்றார்; தனி வீட்டார் பூட்டை நாடுகின்றார்; வியாபாரக் கம்பெனியார் உறுதியான இரும்புக் கதவை அமைக்கின்றனர்; நிதி நிலயத்தார் வன்மையான கட்டிடங்கள் எழுப்புகின்றனர். இவர்கள் முயற்சிகளுக்கெல்லாம் அடிப்படையில், தற்காப்பும் பிறர் மேல் நம்பிக்கை இன்மையும் காணலாம். இந்த அடிப்படைகளைக்கொண்டே—தம் இனத்தின் ஆக்கமும் பிற இனத்தார் மேல் நம்பிக்கை' இன்மையும் காரணமாகக்கொண்டே—இனங்கள் இந்த நாட்டில் சண்டை இடுகின்றன. பெட்டியும்

பூட்டும் கதவும் கட்டிடமும் நாடுவதற்குப் பதிலாக, அரசி யல் அமைப்பை நாடுகின்றன. முன் சொன்ன நான்குக்கும் இடம் கொடுத்த உலகம் ஐந்தாவதையும் காண்கின்றது. வேறு வழி உண்டா? "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று திருவள்ளுவர் எழுதியபோது, தனி மனி தரையும் குடும்பத்தாரையும் எண்ணியிருக்கலாம். ஆனால், இப்படி இனம் இனமாகப் பிரிந்து போரிட்டு நாட்டைக் குழப்புவதை எண்ணியிருப்பாரோ? அந்தக் காலத்திலும் அரசர்கள் பொருளுக்காகப் போர் செய்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அரசர்களும் தனி மனிதர்கள்தானே! அந்தப் போர்களை இனப் போர்கள் என்று சொல்ல முடி யாதே!

அம்மா! உண்மைக் காரணம் விளங்கி விட்டதேதவிர, இனி என்ன வழி என்று தெளிவாகவில்லை. பழக்க வழக்கங் களை ஒன்றுபடுத்தினால் இன ஒற்றுமை ஏற்படும் என்று இன்று காலையில் எனக்குத் தோன்றியது. கடிதம் எழுதும் போதுதான் அந்த வழியிலும் குறை இருப்பது தெரிந்தது. பழக்க வழக்கங்களை ஒன்றுபடுத்துவதற்கு வழி என்ன? அதற்கு உரிய வழி தெரியவில்லையே. அக்பர் முதலானவர் கள் அன்று செய்ய முடியாததை நாம் இன்று செய்துவிட முடியுமா? ஒன்றுபட்டால் வாழலாம் என்ற நம்பிக்கை இருந்த அந்தக் காலத்தில் செய்ய முடியாததை, இன்று— பிரிவுபட்டால்தான் வாழலாம் என்ற உணர்ச்சி தலை யெடுத்துள்ள இன்று செய்ய முடியுமா?

மன்னிக்கவேண்டும்; எனக்கு ஒரு அணிச்சலான எண்ணம் தோன்றுகின்றது. அந்தத் திருக்குறளை மாற்றி

அமைத்தால்—மாற்றி எண்ணும் காலம் வந்தால்—? அப்போது எதுவும் செய்ய முடியும் அல்லவா?

அதாவது "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று இருப்பதால்தானே பெட்டி, பூட்டு, கதவு, கட்டிடம் என்பன வளர்ந்து பாகிஸ்தான் என்பது வரையில் பொருள் தேடும் போட்டி பெருகியுள்ளது. இத்தனைக் குற்றங்களுக்கும் ஒரே கழுவாய் என் கனவில் தோன்றுகின்றது.

"பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் நிலைமை போகவேண்டும். பொருள்பற்றிய பூசல் உலக அமைப்பில் இருக்கக்கூடாது. "பொருளில்லார் இவ்வுலகில் இல்லை" என்று மாறிய நிலைமை வந்துவிடவேண்டும். அப்போது அந்தத் தொல்லைகளுக்கு இடம் உண்டா?

எல்லாக் கட்சிகளும் எல்லாத் தலைவர்களும் சேர்ந்து இதற்காகப் பாடுபடக் கூடாதா? இதிலும் ஒருவர்மேல் ஒருவர்க்கு நம்பிக்கை இல்லையா? மதச் சண்டை, இனச் சண்டை என்று சொல்லி மூட நம்பிக்கையையும் வீண் வெறியையும் வளர்ப்பதைவிட, பொருட்போர் என்ற அந்தப் பொதுப் பகைவனுடைய உண்மையான தோற்றத்தைக் கண்டுபிடித்து ஒன்றுபட்டு ஒங்கியடிக்கக் கூடாதா?

அன்புள்ள மகன்,

எழில்

தமிழன் - அன்றும் இன்றும் - உ

அ. ச. ஞானசம்பந்தம்

•

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தமிழன் வாழ்க்கையைப் பார்க்கப் புகுமுன் அவன் நாடு எத்தகையது, எதை அவன் நாடு என நினைத்தான் என்று காண வேண்டும். தமிழனுக்கு ஒரு வேதம் தந்த திருவள்ளுவர் நாட்டைப் பற்றிக் கீழ் வருமாறு கூறுகிறார்:

> "நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
> நாட வளந்தரு நாடு,"

இதன் கருத்தென்ன? முயற்சி செய்யாமல் பலன் தரக்கூடியதே நாடு என்பது மட்டும் அன்று. ஆனால் பெரு முயற்சி செய்து சிறு பலன் தருவதும் நாடு அல்ல. வளம் என்பது இயற்கையாகக் கிடைக்கும் நலன்களாம். இதனை வேறு பாடல்களால் அறியலாம். 'மதுரைக் காஞ்சி' என்றொரு நூல் உண்டு. மாங்குடி மருதனார் என்ற புலவர் பெருமான், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைப் பாடிய பாடலாகும் அது. அதில் பாண்டி நாட்டைப்பற்றி அவர் கூறுவதாவது:

> "மழைதொழில் உதவ மாதிரங் கொழுக்கத்
> தொடுப்பின் ஆயிரம் வித்தியது விளைய
> நிலனும் மரனும் பயனெதிர்பு நந்த
> நோயிகந்து நோக்கு விளங்க, ... ," •

[உழவுத் தொழில் நன்கு நடைபெறுமாறு வேண்டுங் காலத்தில் மழை உதவவும், ஒரு முறை விதைத்தது ஆயிர

மாக விளையவும், நிலமும் மரமும் தம்முள் போட்டி இட்டுக்கொண்டு, மக்களுக்கு வேண்டிய பயனைத் தரவும், விளைந்த பயனை நன்கு அனுபவித்தலால் நாட்டு மக்கள் நன்கு வாழவும்.]

இப்பகுதியி லிருந்து நாம் அறிய வேண்டிய செய்திகள் பல உண்டு. வளத்தை இவர் எங்ஙனம் கூறுகிறார் என்று காணல் வேண்டும். 'மழை உதவ' என்று கூறியவர், பிறகு 'வித்தியது' என்று கூறலினால், இயற்கையின் பயனாகிய மழையும், மனித முயற்சியாகிய விதைத்தலும் ஒன்றுகூடலைக் கூறுகிறார். இவ்விரண்டினுள் ஒன்று குறையினும் பயனில்லை. நாடு நாடாக இராது. அம்மட்டோ? இன்று அரசியலாரின் காட்டிலாக்கா செய்யும் வேலையை நாமறிவோம். ஆனால் அன்று தமிழர் காட்டைப் போற்றி வந்தனர் என்பது மரத்தின் செயலும் மேற்பாடலில் வருதலால் அறியப்படுகிறது. மனித முயற்சி நாட்டின் செம்மைக்கு இன்றியமையாதது. (தொடரும்)

அறிவிப்பு

'**தமிழன் குரல்**' என்ற புத்தகம் தமிழர் திருநாளன்று வெளிவருவதாக இருந்தது. தடுக்கமுடியாத காரணங்களால் அந்நூல் குறித்த காலத்தில் வெளிவரவில்லை. விரைவில் வெளிவரும்.

ம. பொ. சிவஞானம்,
மானேஜிங் டைரக்டர்,
தமிழ்முரசுப் பதிப்பகம்.

முத்தமிழ் நிலைய புதிய வெளியீடுகள்

1. தமிழர் யார்? அணு 8
2. ஆரியர் தமிழர் கலப்பு 8
3. ஆரிய வேதங்கள் 10
4. தமிழ் — பழமையும் புதுமையும் 8
5. மரணத்தின் பின்? 8
6. சமணமும் சைவமும் 8
7. தமிழர் சமயம் எது? 8
8. இராவணன் வித்தியாதரனா? 8
9. நடன சுந்தரி ரூ. 1
10. பெண்கள் உலகம் அணு 14
11. நாடகக் கலை மலர் ரூ. 2
12. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? அ. 8
13. ஏ, தாழ்ந்த தமிழகமே 8 (சி. என். அண்ணாத்துரை, எம். ஏ. அவர்கள் பேருரை)
14. இராவண காவியம் ரூ. 6 (பாரதிதாசன் சிறப்புப்பாயிரம், சி. என். அண்ணாத்துரை, எம்.ஏ. விரிவான முன்னுரை)

முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை—1.

Demand

PRABHAT INK

High Grade
for Fountain Pens

Available From

PRABHAT TRADERS

Stationers, General Merchants Importers & Exporters

4 & 5, Badrian Street, G. T., Madras.

Tele:—PRABAKAR, Madras.

Branches at :

KUMBAKONAM, TINNEVELLY.

கொட்டு முரசு!

'சிசு'

தமிழா! எழுந்திரு. உன்னைச் சுற்றியிருக்கும் உலகச்சூழ் நிலையை உன்னிப் பார்! கண்ணயர்ந்திருக்கும் காலமா இது? எழு, எழுந்து உட்காரடா! கண்ணை நன்றாகத் துடைத்துக் கொள். நிமிர்ந்து உட்காரடா! நீ யார்? எண்ணிப் பார். உன் தாயின் முகத்தை உற்றுப் பார். நீ எந்த மூலையில் எப்படி ஒடுங்கிவிட்டாய் என்பதை நினைத்துப் பார். தூக்கம் வருமா? நெஞ்சை உரப்படுத்து. நேர்மைக்கு, வாய்மைக்கு, நீதிக்குப் போரிடும் காலம் அடுத்தது. அதோ பார்!

உன் தாய், பார்க்கப் பரிதாபமாயிருக்குதடா. அன்று பூமகளுடன் சரி நிகர் சமானமாகத் தோளோடு தோள் உராய்ந்து அவளுடன் சமமாய் வீற்றிருந்த உன் தாயடா. எட்டுத் திக்கும் பரவி மிளிர்ந்த இன்ப வெள்ளத்தில் திளைத்து, களை பொலிந்திருந்த அவள் முகத்தைப் பார்! அவள் உதரத் துதித்தெழுந்த உத்தம வீரர்களின் தீரச் செய்கையால் அன்று ஒளியுடன் விளங்கிய அவள் கண்களைப் பார்! பொன்னும், மணியும் முத்தும், பவளமும் அன்று அணிசெய்த அவள் மெய்யினைப் பார்!

கோல் தாங்கி வீற்றிருந்து செங்கோலோச்சிய உன் தாயின் அரியாசனம் மண்ணோடு மண்ணாய் மக்கி விட்டதை எண்ணிப் பார். எண்ணினால் கண்ணயருமோடா? அதைத் துடைப்பதற்கென்ன, உன் கை துண்டப்பட்டு

விட்டதா? பொன்னும், மணியும் அள்ளிச் சென்றது போதாதென்று இன்னும் பிறர் உன் செல்வத்தைச் சுரண்டி எடுத்துச் சென்றுகொண்டிருந்தும் ஏமாளியாய் வாழ்கின்றாயே! நவமணிகளால் அணி செய்யப்பட்ட அரியாசனத்தில் வீற்றிருந்து, உன் தாய் சிலமுடன் ஆட்சி செய்யும் காட்சியை நீ காண வேண்டாமா? எழுந்திரு; நெஞ்சை நிமிர்த்தி நேரே நில்.

உன்னை எண்ணிப் பார்; உன் வழிவழிப் பரம்பரையை நினைத்துப் பார்! வங்கத்துக் கங்கைக்கு வாய்க்கால் வெட்டி, தங்கத்தை விளைவித்தவன் உன் தாத்தா வல்லவா! விற்கொடியை-புலிக்கொடியை விரைந்தெடுத்துக் கயற்கொடியை உடன்கலந்து இமயத்தின் நெற்றியில் அமையப் பொறித்தவன் உன் அப்பனுக்கு அப்பனல்லவா? சீனத்தில், சிங்களத்தில், சாவகத்தில் சென்று வாணிகம் நடத்தியவன் உன் பாட்டனல்லவா? சிங்களத்துக்குக் கப்பல் விட்டுச் சீமையனை நடுங்கவைத்த சிதம்பரம் உன் சிற்றப்பனல்லவா?

உன் பாட்டியின் வீரந் தெரியுமா? போர்க்களத்தில் கட்டிய கணவனை யிழந்தாள்; உடன் பிறந்த அண்ணனையும் இழந்தாள். அந்த நிலையிலும் அஞ்சா நெஞ்சுடன் சின்னஞ் சிறு பாலகனைச் சிதறிக் கிடந்த கூந்தலை அள்ளி முடித்து, ஒளியுடைய வேலினைக் கையிற் கொடுத்து ஆடையைக் கட்டி அமர்க்களம் அனுப்பியதை நினைத்தாலே உனக்கு உடல் சிலிர்த்து உள்ளந் துடிக்க வில்லையா?

அவள் தங்கையின் தீரம் தெரியுமா? போர் முகத்தில் அம்புபட்டு வீழ்ந்து மடிந்த மகன் இறந்தொழிந்த களத்திலே சவத்தினை அள்ளித்தள்ளி, மார்பினில் அம்பு தாங்கி

(௪௭-ஆம் பக்கம் பார்க்க)

வைகுந்தம் திறந்தது!

'பாமரன்'

வடமலை ஐயங்கார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடக்கப்போகிறது என்ற செய்தி பெருங்கூட்டத்தைச் சேர்த்துவிட்டது. வடமலை ஐயங்காருக்கு ஏற்பட்ட 'புகழ்' அல்ல கூட்டத்துக்குக் காரணம். ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறப்பது பற்றிய பேச்சுக்கள் நிகழும் என்று அறிவிக்கப்பெற்றிருந்ததுதான். இரண்டு நாளைக்கு முன்னால் வடமலை ஐயங்கார் மந்திரியைப் பார்த்து வந்திருக்கிறார் என்றுகூடப் பேசிக்கொண்டார்கள். இரண்டு நாட்களாக அவர் தருமகர்த்தாக்களின் வீடுகளுக்கும், தேவஸ்தான நிர்வாக அதிகாரியின் வீட்டுக்குமாக அலைந்த அலைச்சலை அளவிட்டுச் சொல்லமுடியாது. அது மட்டுமா?

இத்தனை காலமாக இல்லாத ஓர் ஊக்கமும் உணர்ச்சியும் வடமலை ஐயங்காருக்குப் பிறக்கக் காரணமென்ன என்று சில வட்டாரங்களில் பேசிக்கொண்டார்கள். ஸ்ரீரங்கத்தின் ஆச்சாரிய புருஷர்களெல்லாம் முகத்தைச் சுளித்துக் கொண்டு இரண்டு நாட்களாகப் படாதபாடு பட்டார்கள். அவர்கள் துன்பமெல்லாம் தபாலாபீசுத் தந்திகளாகத்தான் உருவெடுத்தன. சென்னைக்குத் தந்திமேல் தந்தி பறந்தது. மலைமலையாகத் தந்தியைக் குவித்துவிட்டால் மந்திரிகள் தாண்டமாட்டார்கள் என்பது அவர்கள் எண்ணம். அவர்களோடு பழகிய வடமலை ஐயங்கார் சளைத்தவரா என்ன? தபாலாபீசுத் தலைவரிடம் முன்கூட்டியே ஓர் ஏற்பாடு செய்து கொண்டார். ஆலயத் திறப்பு வேண்டாம் என்று ஒரு தந்தி

வந்தால், கட்டாயம் வேண்டும் என்று இரண்டு தந்தி பறக் கட்டும் என்று ஏற்பாடு செய்து வைத்திருந்தார். திருவரங் கத்துப் பெரிய பெருமாள் உள்ள வரையில் தந்திச் செலவுக் குத்தான காசு இல்லாமல் போகப்போகிறது! போஸ்ட்மாஸ் டருக்கு இந்தக் கவலையெல்லாம் கிடையாது. இதெல்லாம் ஸ்ரீரங்கத்து மரபு என்பது அவருக்குத் தெரியும். 'கோயி லுக்குள் ஆபீசர் நுழைந்தனர்', 'இன்று பெருமாளுக்குச் சார்த் திய நாமம் கொஞ்சம் சாய்ந்திருந்தது' என்றெல்லாம் தந்தி அடிக்கும் திருத் தலம் என்பது அவருக்குத் தெரியும்.

பொதுக்கூட்டம் கொள்ளிடத்தில் நடந்தது. இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கிய கூட்டம் பலருக்கு நன்மை யாக முடிந்தது. வயலிலும் தொழிற்சாலையிலும் உழைத்து அலுத்த தீண்டாதார் கூட்டம் வருவதற்குத் தகுந்த நேரம் அதுதான். மேலும் ஸ்ரீரங்கத்து ஆச்சாரியர்களெல்லாம் முக்காடிட்டு வந்து சேரவும் பொருத்தமான நேரம். கூட்டம் ஒரே தடபுடல்தான்.

ஐயங்கார் பேசினர்: உடையவர் செய்த சீர்திருத் தத்தைத்தான் இப்போது செய்யப்போவதாகவும், இந்து சமயம் அழியாமல் இருக்கவேண்டுமென்ற ஒரு பெருநோக் கமே தம்மை இவ்வழியில் முயலச் செய்ததாகவும், உண்ண உணவுக்கும் இருக்க இடத்துக்கும், கட்டத் துணிக்கும் கதியற்றுக் கலங்கும் ஹரிஜன மக்களின் தாழ்ந்த நிலைகண்டு தம் உள்ளம் உருகிவிட்டதாகவும் பலபலவாறு விரிவுரை ஆற்றினர். சொல்லுக்குப் பஞ்சம், தமிழ்மொழியில் அது வும், ஐயங்கார் திருவாயில் இல்லை என்பதைத் தெளிவாக் கிப் பேசினர்.

அவரை விட்டுவிடுவோம். கூட்டத்தில் அதோ முன்னணியில உட்கார்ந்து பலமாகத் தலையாட்டு கிறானே செங்கன் அவனைப் பார்ப்போம். அவன் வேறு யாருமல்ல. வடமலை ஐய்ங்காரின் அடிமை. பங்களாத் தோட்டத்தின் காவற்காரனும்கூட. குடியிருப்பும் அங்கே தான்.

செங்கனின் கவனமெல்லாம் சாமி மீதல்ல. நோய் வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடக்கும் சிலம்பாயிமீதும் அவ னது ஒரே மகள் செல்லத்தின்மீதும்தான். இருந்தாலும் என்ன செய்வான்? பங்களா எஜமானின் ஆணைப்படி அங்கே இருக்கவேண்டிய தாயிற்று. கூட்டம் முடிந்தது. 'நாளைக் காலை ஆறு மணிக்கு ஆலயத்துக்குள் செல்ல அனை வரும் வாருங்கள்' என்ற ஐயங்கார் ஆணையைச் செவியில் வாங்கிச் சிலம்பாயியைக் காண்பதற்காகப் பங்களாத் தோட் டத்திலிருந்த குடிசைக்கு ஓடோடியும் வந்தான்; நடந்தோடி வரவில்லை: பறந்தோடியே வந்தான். செங்கன் தோட்டத் துக்குள் நுழைந்தான். சில்ம்பாயியின் கூக்குரல் அவன் காதில் விழுந்தது. குடிசைக்குள் நுழைந்தான். ஆ! கோரக் காட்சி. இருள்சூழ்ந்த இல்லம்—இல்லை இல்லை—நரகம். சமீபத்தில் பெய்த மழையால் ஈரம் ஏறியிருந்த பிசுபிசுத்த தரை. சிலம்பாயியின் குரல்மட்டும் கேட்கிறதே தவிர அவள் உருவம் தெரியவில்லை. குடிசையின் வடபுறத்தில் சுவர் விழுந்திருந்த காரணத்தால் ஏற்பட்ட திறந்த வெளிப் புறத்தின் ஒளியின் துணையால் சிலம்பாயி இருக்கும் இடத் தைக் கண்டான். முன்னே வந்த குரல் முற்றும் அடங்கி விட்டது. சிலும்பாயியின் நிலைமை அவன் சிந்தனைக்கு எட்டவில்லை. விரைந்து வெளியே வந்தான். பக்கத்தி

விருந்த எஜமானின் பங்களாவுக்கு ஓடினான். செங்கன் பங்களாவின் தலைப்புறக் கதவைத் தட்டினான்.

"எசமான்"

பதில் இல்லை.

"எசமான்! எசமான்!!"

"யாரடா அது? இந்த அர்த்த ராத்திரியில்?"

"சாமி! நான்தான். செங்கன்"

"கழுதை, இந்நேரத்தில் என்னடா இங்கே வேலை?"

"ஐயோ, எசமான்! சிலம்பாயி"

"சிலம்பாயியாவது, செருப்பாவது!"

"ஐயோ, எசமான்! கொஞ்சம் பங்களா டாக்டர் ...."

"சீ, நாயே! எல்லாம் பொழுது விடிந்தால் முனிசிபல் ஆஸ்பத்திரி திறக்கும், போ."

செங்கனுக்குத் தலை சுழன்றது. பொதுக் கூட்டத்தில் ஐயங்கார் ஹரிஜன மக்களைப்பற்றிக் கரைந்து கரைந்து கூறிய வார்த்தைகள் அவன் கவனத்துக்கு வந்தன. ஆலயப் பிரவேசத்துக்குப் பின் ஹரிஜன மக்களின் அல்லல் அடியோடு அழியுமென்று அவன் கட்டிய மனக்கோட்டை சரிந்து விழுந்தது.

சிலம்பாயியைப் பிழைக்க வைக்க டாக்டர் இல்லாவிடினும் ஈரத் தரையில் இருண்ட இல்லத்தில் வாடைக் காற்றால் நடுங்கி நலியும் அவளது நிலையை அறிந்து, பக்கத்தில் இருந்து பணிபுரிய விளக்கேனும் இல்லையே என்று வேதனைப் பட்டான். வெளியே செல்லமுடியாது. பங்களாவின் மதிற் புறத்துக் கதவின் சாவி மாளிகை எஜமான் கையில் இருக்கிறது. என் செய்வான்!

மீண்டும் செங்கன் குடிசைக்குத் திரும்பினான். மெல்லிய குரல்.

"உம்...ம்ம்ம்...ம்ம்ம்..." என்ற முனகல் ஒலி.

அந்தக் குரல் சிலம்பாயினுடையதா, செல்லத்தினுடையதா என்று சிந்தித்துப் பார்த்தான், புரியவில்லை.

மீண்டும் குடிசைக்குள் நுழைந்தான். அப்போதும் அதே இருள்தான் அவனை வரவேற்றது. ஆனால் வடக்கே சுவர் இடிந்த பக்கத்தின் ஒளி முன்னைவிடச் சற்று அதிகமாயிருந்தது. காரணம் வானத்தின் நிலவுதான். ஆம். செங்கன் சிந்தை சற்றே குளிர்ந்தது. எசமான் செயற்கை விளக்கைத் தரமறுத்தார். ஆனால் செங்கனுக்கு இயற்கை விளக்குச் சதி செய்யவில்லை. துணை புரிந்தது. முன்னர் வானத்தே நிலவை மறைத்த மேகம்கூடச் செங்கனின் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி விலகி நின்று நிலவொளியை உதவிற்று.

செங்கன் கண்ணுக்குச் சிலம்பாயி காட்சியளித்தாள்.

"சிலம்பாயி!..."

பதில் இல்லை.

"சிலம்பாயி!..." என்று செங்கன் அவள் கரத்தைப் பிடித்துக் கதறினான்.

ஆ! என்ன காட்சி! அவளது இரு கரங்களுக்குள் இந்த உலகத்தைவிட உயர்வாக நினைத்த தன் ஒரே மகள் செல்லத்தை மார்புற அணைத்திருந்தாள். இரண்டு வயதுக் குழந்தை செல்லத்தின் அழுகுரல், அழைத்தும் பேசாத சிலம்பாயியின் மௌனம் இரண்டும் சேர்ந்து செங்கனின் உள்ளத்தைத் துளைத்தன.

ஆம். விடிந்தால் திருவரங்கப் பெருமானின் திருக்கோயில் கபாடம் திறக்கும், அவருடைய திருவருள் கிடைக்

கும் என்றெல்லாம் எண்ணியிருந்த சிலம்பாயியிக்குத் திருவரங்க மல்ல, வைகுந்தமே திறந்துவிட்டது! செங்கன் செல்லத்தை மடியில் வைத்துச் சிலம்பாயியின் பிரேதத்தின் பக்கத்திலிருந்து பொழுது விடியும் நேரத்தை எதிர்பார்த்திருந்தான்.

அதிகாலை. ஐந்து மணி. வடமலை ஐயங்கார் பங்களாவின் வாயிற் புறத்தே இருந்து எழுந்த ஜயகோஷம் செங்கனின் காதைத் துளைக்கிறது.

“தீண்டாமை ஒழிக” “ஹரிஜன உத்தாரகர் வடமலை ஐயங்கார் வாழ்க!” என்ற கோஷம்.

(சக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மடிந்தான் என்று கண்டதும் மகிழ்ந்தாளே, அவள் கதையை நீ கேட்டதுண்டா? கேட்டால் தூங்குவயோ? உன் குருதி கொதித்தெழாதா?

இதோ, பிடி மணிவயிர வாள்! உறையிற் போட்டு உறங்குவதற் கல்ல. திக்கெட்டும் வெற்றி நாட்டித் தீரத்துடன் விளங்குவதற்கு அளித்த வாள்! இன்னுமென்ன தயங்குகிறாய்! தனியன் என்ற தயக்கமா? நீ இருப்பது தமிழ் நாடடா?

இதோ முரசு! கொட்டு, கொட்டு! நன்றாகக் கொட்டு!

எட்டுத் திக்கும் வெற்றி பெறக் கொட்டுமுரசை! வீறு கொண்டு எழுக என்று கொட்டு முரசை! ஆழி நிகர் படை சேரக் கொட்டு முரசை! பற்றியிருக்கும் பகை ஒழியக் கொட்டு முரசை! அன்னியனை ஓட்டு என்று கொட்டு முரசை! கண்ணியத்தை வளர் என்று கொட்டு முரசை! கொட்டு, கொட்டு, கொட்டு, கொட்டு முரசு !!

மதிப்புரை

ஊரும் பேரும்

[ஆசிரியர் . திரு. ரா. பி. சேதுப்பிள்ளை விலை ரூ. 5 - 0 - 0]

இந்த நூலை முற்றும் படித்து முடித்தவுடன் ஒரு புதிய தமிழகத்தைக் கண்டுவிட்டோம் என்ற களிப்பு ஏற்படுகிறது. அதுவும் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய நமது மூதாதையர் தமிழகத்தைச் சித்திரம் தீட்டிக் காட்டுகிறார், பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை.

பண்டைத் தமிழகத்துச் சிற்றூர்களின் பெயர்கள் அக்காலத் தமிழ்நாட்டின் செல்வச் சிறப்பையும் தமிழரின் வீரத்தையும் சான்றோர் பெருமக்களின் அற உள்ளத்தையும் நினைவூட்டுகின்றன. ஏரிகளுக்குப் பொன்னேரி, தேனேரி என்றும் ஆறுகளுக்கு நெய்யாறு, பாலாறு என்றும் வைக்கப்பட்டுள்ள பெயர்களிலிருந்து நம் நாடு நீர்வளம் நிறைந்த ஒன்று என்பதை உணர்கின்றோம். அந்நீர்வளத்தை ஒட்டி நிலவளத்தையும் பொன்வயல், பொன் விளைந்த களத்தூர் என்ற ஊர்ப் பெயர்களால் அறிகிறோம். இப்படி நம் செந்தமிழ் நாட்டின் சிறப்பை யெல்லாம் நமது சிந்தனைக்குக் கொண்டு வரும் இந்நூலை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படிக்க வேண்டுமென்று கோருகிறோம். நூலின் இறுதியில் வருங்காலத் தமிழகத்தின் எல்லை குமரிமுதல் திருப்பதிவரை இருக்கவேண்டுமென்ற ஆவலைப் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை வெளியிட்டுள்ளார். அதற்குப் பாடுபடவும் நம்மைத் தூண்டுகின்றார்.

இந்தியச் சிறுகதைகள்

[தொகுத்தவர் : திரு. சு. குருசாமி, 154 பக்கம் வெளியீடு : அருணோதய நிலையம், வேலூர் (சேலம்) விலை ரூ 2 - 8 - 0]

தமிழ் மொழிக் கதைகள் இரண்டும், பிற இந்திய மொழிக் கதைகள் எட்டும் இப்புத்தகத்தில் உள்ளன. திரு. சு. குருசாமியின் கதை கடைசியில் இருந்தாலும் தரத்தில் முதல் இடம் பெறத்தக்கது. நல்ல கதைத் தொகுப்பு இது. வாய்மொழியாக வழங்கிவரும் பல தமிழ் நாட்டுக் கதைகளை ஆசிரியர் தொகுத்து வெளியிடுவது நல்லது. திறமையும் ஊக்கமும் உள்ள நண்பர் இத்தொண்டை மேற்கொள்ளுவாராக.

“தமிழர் நாடு”

[ஆசிரியர் : கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி. விலை 0 - 0 - 6.]

இதுவரை இரண்டு வெளியீடுகள் வந்திருக்கின்றன. தமிழர் இயக்கத்தில் ஆர்வமுள்ள திரு. விசுவநாதம் அவர்கள் தமிழர் ஆட்சி தோன்றினால் அது எப்படி யெல்லாம் விளங்கும் என்ற உள்ளக் கிடக்கையை இதில் தீட்டியிருக்கிறார்.

Edited & Published by M. P. Sivagnanam at 233 Lingha Chetty Street Madras I
Printed by K. C. Nagalingha Mudaliar at the Senguntha Mithiran Press Madras

தமிழ் முரசு

(மாதம் இருமுறை)

உள்நாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0
6 மாதச் சந்தா	ரூ. 3—0—0
தனி இதழ்	0—4—0

வெளிநாடு

ஆண்டுச் சந்தா	ரூ. 7—0—0
6 மாதச் சந்தா	ரூ. 4—0—0
தனி இதழ்	ரூ. 0—5—0

ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு எழுதுக:

தமிழ் முரசுப் பதிப்பகம்

233, லிங்க செட்டி தெரு

சென்னை-1

ஆரோமால் (AROMAL)

பூச்சி மருந்து

(1) சாப்பாட்டுக் கூடம், ஓட்டல்கள், சமையலறை இவற்றிலுள்ள புளிப்பு நாற்றத்தை நீக்கிச் சுத்தம் செய்ய உதவுவது.

(2) சொற்பொழிவு மண்டபங்கள், கொட்டகைகள் இவற்றில் ஈ, கொசு முதலானவை வாராமல் தடுக்கத் தெளிப்பது.

(3) குளிக்கும் தண்ணீரில் சிறிது கலந்தால் உடலில் உள்ள துர்நாற்றத்தை நீக்கி சுக உணர்ச்சியைத் தருவது.

(4) க்ஷவரம் பண்ண எடுக்கும் நீரில் சிறிது கலந்தால் சுக க்ஷவரம் உண்டு.

(6) வாயிலுள்ள துர்நாற்றத்தை நீக்க உதவுவது (ஒரு கோப்பைத் தண்ணீரில் ஒரு சொட்டு ஆரோமால் சேர்த்தால் போதும்.)

ஸ்வாதி பிராடக்ட்ஸ் லிமிடெட்

P. B. 655 - சென்னை - 14